

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிர்களுக்கு வங்கிக்கணக்கில், பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான முன்பணம் 3,000 மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பு 2,000 என மொத்தம் 5,000 வரவு வைத்துள்ளார்கள் இந்த மகிழ்ச்சியான செய்தியை பொதுமக்களுடன் கொண்டாடும் வகையில், திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் சென்னீர்குப்பம் பகுதியில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார் உடன் சட்ட மன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி. ஜெரால்டு, பா.நரேஷ்குமார், உள்ளனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் உரிமை தொகை பெறுவோருக்கு பிப்ரவரி மார்ச் ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3000 ஆயிரம் கோடைகாலச் சிறப்புத் தொகுப்புபாக ரூ.2000. ஆயிரம் என மொத்தம் 5ஆயிரம் வங்கி வரவு வைப்பில் வழங்கி இன்ப அதிர்ச்சி தந்ததற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக திமுக சார்பில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருத்தணியில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார் உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 359 வது நாள்!

## அம்பத்தூர் கிழக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,பிப்.14-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 359 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (13.2.2026), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 84ஆ, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், 2) வட்டம் 84ஆ, தொடர்வண்டி சாலை, கொரட்டூர், சென்னை ஆகிய பகுதிகளில்



இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே. மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/ கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால் பி.செந்தில்.வி. ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S. முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அ சோக் கு மா ர் , L.சம்பத்குமார், க.பா.பிரதீப் கு மார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டக் கிளைக் கழக மன்றமான கலைஞர் படிப்பகத்தை மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், வட்டச் செயலாளர் கோ.யுவராஜ், மா.ஜெயக்குமார், பா.வினோத்குமார் மற்றும் பி.எல்.ஏ.2, பி.எல்.சி., கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தியாகராயர் நகர் முன்னாள் பகுதிக் கழகச் செயலாளர்

# பழக்கடை கி.ஜெயராமன் 42 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்,எல்,ஏ - கே.ஏழுமலை எம்,சி அறிக்கை!

சென்னை, பிப். 14

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராய நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் முன்னாள் பகுதிக் கழகச் செயலாளர் பழக்கடை கி. ஜெயராமன் அவர்களின் 42 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (14.2.2026 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில், தியாகராயர் நகர், கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதற்கு தியாகராயர் நகர் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

### மகளிர் உரிமைத் தொகை முன்கூட்டியே வழங்கியதோடு


# உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்ட தாயுள்ளம் கொண்ட தமிழ்நாடு முதல்வர் நீடு வாழ்க!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, பிப்.14

தமிழக மக்கள் 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெருவாரியாக வாக்களித்து தமிழகத்தின் முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்தார்கள்.

தமிழக மக்களின் நம்பிக்கைக்குரிய முதல்வராக அவர் பொறுப்பேற்றபோது, 2-ஆம் கட்ட கொரோனாவால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் இருந்தார்கள். பதவியேற்ற முதல்வர் அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த மருத்துவ சிகிச்சைகள் அளித்ததோடு மட்டுமல்லாமல், வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களின் துயர் துடைக்க ரூபாய் 4,000 நிவாரணத் தொகையும் வழங்கினார்.



கழகத் தேர்தல் அறிக்கையில் அறிவித்த வாக்குறுதிகளில் ஒன்றான அரசுப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாமல் பயணம் செய்வதற்கு தான் முதல் கையொப்பமிட்டார். இதன் மூலம் மகளிர் இன்று பெரிய அளவில் பயனடைந்ததோடு, சேமிக்கும் நிலையை உருவாக்கித் தந்தார்கள். இந்த திட்டத்தை மற்ற மாநிலங்களிலும் பின்பற்றி செயல்படுத்தி வருகிறது.

கழகம் ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கு ரூ.1,000/ மாதந்தோறும் வழங்கப்படுமென அறிவித்து 2023 செப்டம்பர் மாதம் முதல் ஒவ்வொரு மகளிருக்கும் உரிமைத் தொகைமாதம் ரூ.1,000/ வழங்கி இன்று 1 கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகிறார்கள். மகளிர் வாழ்க்கைக்கு உதவிடும் இது ஒரு புரட்சிகரமான திட்டம்.

தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை தமது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றி வருகிறார். கடுமையான நிதி பற்றாக்குறை இருந்தபோதிலும் நான் முதல்வன், புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன், பள்ளிகளில் மாணவர்களின் மதிய உணவுடன் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், முதியோர் நியாய விலைக்கடைக்கு செல்லாமல் வீடு தேடி உணவுப் பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டம் போன்ற பல திட்டங்களைக் கொண்டு வந்து தமிழகத்தை அனைத்து துறையிலும் முதன்மை மாநிலமாக நிலை நிறுத்தியுள்ளார்.

ஒன்றிய அரசாங்கம் நியாயமாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதிகளையெல்லாம் தர மறுத்து தமிழ்நாடு அரசுக்கு நிதி நெருக்கடிகளை உண்டாக்கி ஒரு அவப்பெயரை உண்டாக்கும் செயலை செய்து கொண்டிருக்கிறது. மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை சீர்குலைக்க பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. முயன்று வரும் செய்தி அடிப்படையில் முதல்வர் அவர்கள் காணொலி செய்தி வெளியிட்டார்கள். அதில் மகளிருக்கு கொடுக்கும் உரிமைத் தொகையை மேம்படுத்துவதற்காக நாம் செயல்பட்டு வரும் நிலையில் “டெல்லியில் இருக்கும் ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக இருக்கும் ஒரு கூட்டமும்” எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலை காரணங்காட்டி அடுத்த 3 மாதத்திற்கு மகளிர் உரிமைத் தொகையை நிறுத்தவும், இதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சூழ்ச்சி செய்வதாக செய்திகள் வருகின்றன” என தெரிவித்தார். 1 கோடியே 31 லட்சம் மகளிர் பாதிப்படையும் நிலை உள்ளதால் நம்மில் ஒருவரான முதல்வர் மகளிர் உரிமைத் தொகை பிப்ரவரி மாதம் மட்டுமல்லாமல், அடுத்த 2 மாதங்கள் மார்ச், ஏப்ரல் மாதத்திற்கான தவணைகளைச் சேர்த்து ரூ.3000ம், கூடுதலாக கோடைக்கால தொகுப்புத் தொகை என மேலும் ரூ.2000 சிறப்புத் தொகையும் சேர்த்து 13.02.2026 அன்று ரூ. 5,000த்தை அவர்களுடைய வங்கிக் கணக்கிற்கு சென்றடைய உத்தரவிட்டுள்ளார்.

2026-ஆம் ஆண்டு பிறந்ததும், தமிழ் திருநாளாம் பொங்கல் திருநாளில் சிறப்பாக கொண்டாடுவதற்கு 2 கோடியே 23 லட்சம் குடும்பங்களுக்கு ரூ.3000 வழங்கி அத்துடன் பொங்கல் வைப்பதற்கான பொருட்களையும் தந்து நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார்கள்.

மக்களின் நலன் காக்கும் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மற்றும் சிறப்பு தொகுப்பு தொகை என ரூ.5000 வழங்கியதோடு, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தால் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000மாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு மூலம் அமைப்புசாரா தொழிலில் உள்ள மகளிர், நடைபாதை வியாபாரத்தில் உள்ள மகளிர் என உழைக்கும் பெண்கள் வாழ்வை முன்னேற்றம் அடைய செய்யும் முதல்வரின் அறிவிப்பை கோடான கோடி தமிழ்நாட்டு தொழிலாளர்களின் சார்பாக நன்றியை தெரிவிப்பதோடு, மீண்டும் கழக ஆட்சி அமைய தொழிலாளர் வர்க்கம் நம் உயிர் நிகர் தலைவரை இரண்டாம் முறை ஆட்சிக் கட்டிலில் அமர வைக்க அயராது களப்பணியாற்றுவோம்.

தாயுள்ளம் கொண்ட மக்களின் முதல்வர் தளபதி அவர்கள் நீடுழி வாழ்க என தொழிலாளர்கள் சார்பில் வாழ்த்துகிறேன்.

வெல்வோம் 200 படைப்போம் வரலாறு.

இவ்வாறு மு.சண்முகம் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்ட பயனாளர்களான 1.31 கோடி மகளிருக்கும் மூன்று மாத மகளிர் உரிமைத் தொகை மற்றும் கோடைகாலச் சிறப்பு தொகை என ரூ.5,000/ வழங்கியதற்கும், மீண்டும் கழக ஆட்சி அமைந்ததும் மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும் என வாக்குறுதி அளித்திருப்பதற்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் எழும்பூர் தொகுதியில் மகளிருக்கு இனிப்புகளை வழங்கினார்.



100 நாள் வேலை ரத்து – விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் – நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து! கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் திமுக சார்பில் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆலோசனை படி ஒன்றிய கழகச் செயலாளர் கி.வேணு ஆனந்த் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பா.செ.குணசேகரன், கழகப் பேச்சாளர் விக்னேஷ் உதயன், மாவட்ட அயலகம் அணி அமைப்பாளர் ஸ்ரீதர் உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி தோழர்கள் கலந்து கொண்டார்கள்

### சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிற்கிணங்க

# சென்னை மெரினா கடற்கரையில் 300 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு!

சென்னை, பிப்.14-

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தலைமையிலான பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய இடைக்கால குழுவின் (Adhoc Committee) ஒத்துழைப்புடன் ஜம்முகாஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் என்.பால் வசந்தகுமார் மேற்பார்வையில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், நீதி பேராண்மை மனு எண் 36085/25 ல் பிறப்பித்த உத்தரவிற்கிணங்க சென்னை, மெரினா கடற்கரையில் 300 வியாபாரிகளுக்கான கடைகள் ஒதுக்கீட்டிற்கான குலுக்கல் பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள “அம்மா மாளிகை”யில் உள்ள கூட்டரங்கில், நேற்று (12.02.2026) காலை 10 மணிக்கு துவங்கி, நடைபெற்றது.



மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்ட திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் மகளிர் உரிமைத் தொகை மூன்று மாதம் மற்றும் 2000 ரூபாய் கோடைகால சிறப்பு தொகை என ஐந்தாயிரம் ரூபாய் மகளிர் வங்கிக் கணக்கில் வரவு வைத்ததை கொண்டாடும் விதமாக வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் மகளிர் நிர்வாகிகள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாடி மகிழ்ந்தார்கள். மாமன்ற உறுப்பினர் க. காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். உதயகுமார், காஞ்சனா மோகன், துளசி, அத்திக்குளம் தேவி, சரஸ்வதி, பெரிய நாயகி, கஸ்தூரி, வினோத் உள்ளிட்ட நிர்வாகிகள், பாகமுகவர்கள், பாக உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.



மகளிர் உரிமைத் தொகை 5000 ரூபாய் மகளிரின் வங்கி கணக்கில் வரவு வைத்த முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியை போற்றும் வகையில், சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி, 139அ வட்டக்கழகத்தின் சார்பில் வட்டக் கழக செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் எம்.எஸ்.ஹரி பாபு, டி.என்.சிவமணி, இ.வரதன், மா. ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், வெ.புருசோத்தமன், முன்னிலையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது.